இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் 188-189 / 2018

(சிறப்பு அனுமதி மனு (உ) எண்கள் 10638-10639/2013)

தனம்மா என்கிற சுமன் கர்பூர்
மற்றும் ஒருவர் மேல்முறையீட்டாளர்கள்

எதிர்

அமர் மற்றும் பலர் எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே.சிக்ரி

1. இங்குள்ள இரு மேல்முறையீட்டாளர்கள், இந்து கூட்டுக்குடும்ப கொடி வழி முன்னவரான குருலிங்கப்பா சாவடியின் மகள்கள் ஆவர்.இவ்விரு மகள்களைத் தவிர, அவருக்கு அருண்குமார் மற்றும் விஜய் என இரு மகன்கள் உள்ளனர்.குருலிங்கப்பா சாவடி 2001-ஆம் ஆம் ஆண்டில் மேற்சொன்ன இரு மகள்கள், இரு மகன்கள் மற்றும் அவருடைய விதவை மனைவி சுமித்ராவை விட்டுவிட்டு இறந்துவிட்டார்.அவருடைய இறப்பிற்குப் பிறகு, இரு மகன்களும், விதவை மனைவியும் மேற்சொன்ன சொத்துக்களில் பங்குரிமையர்களாக கூட்டுடைமையிலுள்ளனர் என்றும், அட்டவணை 'பி'-இல் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் குருலிங்கப்பா சாவடியின் பெயரில் கூட்டுக் குடும்ப கருப்பொருளிலிருந்து ஈட்டப்பெற்றது என்றும் கூறி, பாகப்பிரிவினைக்காகவும், வழக்குரையில் அட்டவணை ' பி ' முதல் ' ஈ ' வரையுள்ளவற்றில்

விவரிக்கப்பட்ட வழக்குச் சொத்தின் தனி தனி சுவாதீனத்திற்காகவும் சுவா, அருண்குமாரின் மகனான அமர், உரிமை வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார்.இங்குள்ள மேல்முறையீடானது இந்து வாரிசுரிமைச் சட்டம்,1956 (இதில் இதற்குப் பிறகு ' சட்டம் ' எனக் குறிப்பிடப்படும்) இயற்றப்படுவதற்கு முன் பிறந்தவர்களாதலால், அவர்கள் மேற்படி கூட்டுக் குடும்பத்தில் பங்குரிமையர்களல்லர் என்பது அவருடைய வழக்காகும்.மேலும், அவர்கள் திருமணமான மகள்கள் என்றும், அவர்களின் திருமணத்தின்போது, பணம் மற்றும் தங்கம் பெற்றுக்கொண்டனர் என்றும், ஆகவே, அவர்களுடைய பங்கை கைதுறந்துவிட்டனர் என்றும் வாதிடப்பட்டது.

2. இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள், தாங்கள் குருலிங்கப்பா சாவடியின் மகள்களாக இருப்பதால், கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் உரிமையுடையவர்கள் என்று உரிமைகோரியும், அவர், 1950-ஆம் ஆண்டு இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகுதான் இறந்தார் என்ற காரணத்தினாலும், மேல்முறையீட்டாளர்கள் அவருடைய மகள்கள் என்பதாலும் உரிமை வழக்கை எதிர்த்தனர்.

3. விசாரணை நீதிமன்றம் உரிமை வழக்கைத் தீர்ப்பாணையிடுகையில், மேல்முறையீட்டாளர்கள் சட்டம் இயற்றப்படுவதற்கு முன் பிறந்தவர்களாதலால், அவர்கள் எந்த ஒரு பங்கு பெறுவதற்கும் உரிமை யுடையவர்களல்லர், ஆகையால் பங்குரிமையர்களாக கருதப்பட இயலாது எனத் தீர்மானித்தது.மேல் முறையீட்டாளர்கள் சட்டத்திருத்தத்திற்குப் பிறகு எவ்வகையிலேனும் மேற்படி சொத்துக்களில் பங்கு பெற்றுக்கொண்டனர் என்ற மாற்று வாதுரையையும் ம் விசாரணை நீதிமன்றம் நிராகரித்தது. காண்க: 2005-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம். பாகப்பிரிவினைக்காக தாக்கல்

செய்யப்பட்ட உரிமை வழக்கில் பிறப்பிக்கப் பட்ட 2007-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதியிட்ட தீர்ப்பாணையை உறுதிசெய்ததன்மூலம், விசாரணை நீதிமன்றத்தின் இக்கருத்தானது, 2012-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப் பட்டுள்ளது.

4. மேற்சொன்ன பின்னணியில் இம்மேல் முறையீட்டில் பரிசீலனைக்காக எழுகின்ற ற சட்ட வினாவானது, குருலிங்கப்பா சாவடியின் மகள்களான மேல்முறையீட்டாளர்கள் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே பிறந்தவர்கள் என்ற ற காரணத்தினால், அவர்களுடைய பங்கு மறுக்கப்பட இயலுமாதலால், பங்குரிமையர்களாக கருதப்பட இயலாதா? என்பதாகும்.மாற்றுக்கேள்வியானது, இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம் 2005 இயற்றப்பட்டதால், மேல்முறையீட்டாளர்கள்" பிறப்பினால் "மகனைப்போன்று அதேமுறையில் தங்களுக்கே உரிய உரிமையில் பங்குரிமையராக ஆகிவிடுவார்களானால், அந்த மகனைப் போன்றே சமபங்குக்கு உரிமையுடையவர்களா? என்பதாகும்.

5. நாங்கள் இவ்வழக்கில் எழுந்துள்ள சுருக்கமான பொருண்மைசார்ந்த பின்னணியுடன் உள்ளடங்கியுள்ள வழக்கின் சாரத்தைக் குறிப்பிட்டுள்ள போதிலும், அதில் அடங்கியுள்ள பிரச்சனையின் மூலத்தைப் புரிந்துகொள்வதற்காக அவசியமா-யிருக்கலாமென்கின்ற மேலும் சில பொருண்மை களையும் தொகுத்துரைத்துள்ளோம்.நாம் தரப்பினர்களின் மரபுவழிப் பட்டியலுடன் கீழுள்ளவாறு துவங்கலாம்:

குருலிங்கப்பா = சுமித்ரா

(பிரதிவாதி 8)

மகானந்தா (பி.வா.7) | அருண்குமார்) (எ) அருண் (இறந்தவர்) (பி,வா,1) =சரோஜனி (பி.வா .2 | விஜய் (பி.வா.5)) | தனம்மா (பி,வா.6)

ஷீதல் (பி.வா.3) | அமர் (வாதி) | திரிவேணி (பி.வா.4)”

6. இதிலுள்ள முதல் எதிர்மேல்முறையீட்டாளர் (வாதி), 2002-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள், வழக்கு அட்டவணைச் சொத்துக்களில் 1/15 பங்கினைக் கோரி உரிமை வழக்கு தாக்கல் செய்தார்.அந்த உரிமை ம வழக்கில் அவர் பாகப்பிரிவினைக்குரிய சொத்துக்களைக் குறிப்பிட்டிருந்தார்.

7. வழக்குரை அட்டவணை சி- ஐ உள்ளடக்கியுள்ள சொத்துக்களான வீடு, கூட்டுக் குடும்பத்திற்குரியதாகும்.வழக்குரை அட்டவணை ' டி' உள்ளடக்கியுள்ள சொத்துக்களான கடை, கூட்டுக் குடும்பத்திற்குரியதாகும்.வழக்குரை அட்டவணை 'ஈ'-ல் உள்ளடக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் கூட்டுக் குடும்பத்திற்குரியவை.வழக்குரை அட்டவணை சொத்துக்கள் கூட்டுக் குடும்பத்திற்குரியவை என்றும், வாதியின் தந்தையான 1-ஆவது பிரதிவாதி, வாதியையும், அவரது உடன்பிறப்புகளையும் புறக்கணித்து, வழக்கு அட்டவணை சொத்துக்களின் பாகப்பிரிவினையைக் கோரினார் என்றும் வாதி கூறினார்.வழக்கு

அட்டவணைச் சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் ஆகும் என வாதி வாதிட்டார்.கொடிவழி முன்னவரான குருலிங்கப்பா உரிமை வழக்கு தாக்கலுக்கு 1 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்று வழக்குரையின் பத்தி 5-இல் வாதி வாதிட்டார்.வழக்கு அட்டவணைச் சொத்துக்களில் 1-ஆவது பிரதிவாதி 1/3 பங்கைப் பெற்றிருந்தார்.5 மற்றும் 8-ஆவது பிரதிவாதிகள் ஒவ்வொருவரும் முறையே 1/3 பங்கைப் பெற்றிருந்தனர் என்று வாதி வழக்குரையின் 7-ஆவது பத்தியில் வாதிட்டார்.6 மற்றும் 7-ஆவது பிரதிவாதிகள் வழக்கு அட்டவணைச் சொத்துக்களில் எந்தப் பங்கும் பெற்றிருக்கவில்லை என்றும் வாதி வாதிட்டார்.

8. 1-ஆவது பிரதிவாதி (வாதியின் தந்தை) மற்றும் குருலிங்கப்பா சாவடியின் மகன் எதிர்வழக்குரை எதனையும் தாக்கல் செய்யவில்லை. 2, 3 மற்றும் 4-ஆவது பிரதிவாதிகள் வாதியின் கோரிக்கையை ஆதரித்து, தங்களின் தனித்தனியான எதிர்வழக்குரைகளைத் தாக்கல் செய்தனர்.இருப்பினும், 5-ஆவது பிரதிவாதி (இதில் 5-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் குருலிங்கப்பா சாவடியின் மகன்) உரிமை வழக்கை எதிர்த்துரைத்தார்.குருலிங்கப்பாவின் இறப்பிற்கு பிறகு, வாய்மொழி பாகப்பிரிவினையானது. 1-ஆவது பிதிவாதிக்கும் 5-ஆவது பிரதிவாதிக்கும் மற்றும் பலருக்குமிடையே நடந்து, அந்தப் பாகப்பிரிவினையில் 1-ஆவது பிரதிவாதிக்கு சில சொத்துக்கள் ஒதுக்கப் பட்டன, 5-ஆவது பிரதிவாதிக்கு வேறுசில சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன மற்றும் 8-ஆவது பிரதிவாதியான குருலிங்கப்பா சாவடியின் மனைவி சுமித்ராவுக்கு வேறுசில சொத்துக்கள்

ஒதுக்கப்பட்டன. 6, 7-ஆவது பிரதிவாதிகளுக்கு மேற்சொல்லப்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் சொத்துக்கள் எதுவும் ஒதுக்கப்படவில்லை என்று 5-ஆவது பிரதிவாதி மேலும் வாதிட்டார்.

9. சொத்துக்களுள் ஒன்று அதாவது, சி.டி.எஸ். எண் 774-ம், வேறு சில சொத்துக்களும் கூட்டுக் குடும்பச் சொத்துக்களல்ல என்றும் 5-ஆவது பிரதிவாதி மேலும் வாதிட்டார்.

10. மேல்முறையீட்டாளர்கள் சொத்தில் தங்களுடைய பங்குக்கு தாங்கள் உரிமையுடையவர்கள் என்றும் கோரினர்.எழுவினாக்கள் வனைந்து, சாட்சியத்தைப் பதிவு செய்த பின்னர், வழக்கு அட்டவணைச் சொத்துக்கள், சி.டி.எஸ். எண் 774-ஐத் தவிர, வழக்குரை அட்டவணை சி-இல் உள்ள சொத்துக்களான வீடு கூட்டு குடும்பச் சொத்துக்களாகும் என்று விசாரணை நீதிமன்றம் தனது 2007-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை மூலம் தீர்மானித்தது.

11. வாதி, 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் ஆகியோர் கூட்டுக் குடும்பச் சொத்துக்களில் 1/8 பங்கு பெற உரிமையானவர்கள் என விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.8-ஆவது பிதிவாதி (குருலிங்கப்பா சாவடியின் மனைவி) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது விருப்பாவணம் எழுதா மல் இறந்துவிட்டார் மற்றும் அவருடைய பங்கு 1 மற்றும் 5-ஆம் பிதிவாதிகள் சார்பாகத்தான் உரிமை மாற்றம் செய்யப்பட்டது, ஆகவே, 1 மற்றும் 2-ஆவது பிரதிவாதிகள் அந்தப் பங்கில் 1/2 பங்கு பெற உரிமையுடையவர்கள் என்பதை விசாரணை நீதிமன்றம் குறித்துக்கொண்டது.விசாரணை நீதிமன்றம் பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தது:

"வாதி பாகப்பிரிவினைக்காகவும், வழக்கு அட்டவணைச் சொத்துக்கள் ' பி ' ' சி ' மற்றும் ' டி '-இன் (சி.டி.எஸ். எண் 774 தவிர) சுவாதீனத்திற்காகவும், மேலும், ஆணையர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்கள் தொடர்பானவற்றுக்கும் உரிமையுடையவர் என்று தீர்மானித்து, வாதியின் உரிமை வழக்கைத் தீர்ப்பாணை யிட்டுள்ளது, ஆணையரின் அறிக்கை சா.ஆ.பி.16-ஆனது தீர்ப்பாணையின் பகுதியை அமைக்கின்ற இயந்திரங்களின் பட்டியலை உள்ளடக்கியுள்ளது.

மேற்சொன்ன சொத்துக்களில் 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள் ஒவ்வொருவரும் 1/8 பங்குக்கு உரிமையுடையவர்கள் மற்றும் 5-ஆவது பிதிவாதி 4/8 பங்குக்கு உரிமையுடையவராவார். "

12. இவ்வாறாக விசாரணை நீதிமன்றம், மேல்முறையீட்டாளர்களுக்கு எந்தவொரு பங்கினையும் அளிக்க மறுத்தது.

13. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறையுற்ற 6 மற்றும் 7--ஆவது பிரதிவாதிகள், கொடிவழி முன்னவர்களின் மகன்களான 1 மற்றும் 5-ஆவது பிரதிவா போன்றே சம பங்குகோரி, உயர் நீதிமன்றத்தின் முன்பாக ஆர்.எப்.ஏ. எண் 322/2008 என்ற மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தனர்.

14. உயர் நீதிமன்றம், 2012-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ஆம் நாளிட்ட அதன் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது. அதன்பிறகு, 6 மற்றும் 7-ஆவது பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தின் முன்பாக 2012-ஆம் ஆண்டு மார்ச் 4-ஆம் தேதியன்று மறு ஆய்வு மனு எண் 1533/2012- ஐ தாக்கல் செய்தனர், அதுவும் அதே முடிவை அடைந்தது.

15. நாங்கள், தரப்பினர்களின் கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டோம்.மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், உயர் நீதிமன்றத்தின் முன்பாக வைக்கப்பட்ட பணிந்துரைகளையும், மேற்கண்டவற்றையும் மீண்டும் வலியுறுத்திய அதே சமயத்தில், எதிர்மேல்முறை-யீட்டாளர் களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட காரணத்தின் மீது சார்வுற்று, அப்பணிந்துரைகளை மறுத்தார்.

16. நாம், முதலில் சட்டத்தின் பிரிவு 6-இன் வகையங்களை, 2005-ஆம் ம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்மூலம் திருத்தம் செய்யப்படுவதற்கு முன்பிருந்தவாறாக கவனிப்போம்.இவ்வகையம் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்பப்படுவதாவது:

> "6. பங்குரிமைச் சொத்தில் பாத்தியதையின் உரிமை மாற்றம் ஓர் இந்து ஆண், மித்தாக்ஷரா பங்குரிமைச் சொத்தின் பாத்தியதையில் இருந்து, இச்சட்டம் துவங்கிய பிறகு இறந்திருக்கிறபோது, சொத்திலிருக்கும் அவரது இறப்பின்போதான

பாத்தியதை, இச்சட்டத்தின்படியின்றி பங்குரிமையில் எஞ்சியிருக்கின்ற உறுப்பினர்கள் மீது எஞ்சுநர் உரிமைமூலம் உரிமை மாற்றமடையும்: ஆனால், இறந்துபோனவர் அட்டவணையின் முதல் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பெண் உறவினரையோ அல்லது அப்பெண் உறவினர் மூலம் உரிமைகோருகின்ற, அப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆண் உறவினர் ஒருவரையோ விட்டுச் சென்றிருந்தால், மித்தாக்ஷரா பங்குரிமைச் சொத்தில் இறந்தவரின் பாத்தியதையானது, இச்சட்டத்தின் கீழ், எஞ்சுநர் உரிமைப்படி யல்லாமல், விருப்புறுதியாவணப்படியாகவோ அல்லது விருப்புறுதியாவணம் எழுதாமல் வாரிசுரிமைப்படியாகவோ நேர்வுக்கேற்ப உரிமை மாற்றமடையும்.

விளக்கம் 1-இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் இந்து மித்தாக்ரா பங்குரிமையரின் பாத்தியதையானது, அவர் சொத்தின் பாகப்பிரிவினைக்கு உரிமையுள்ளவரா?இல்லையா?என்பதைப் பொருட்படுத்தாமல், அவரது இறப்பிற்கு முன்பாகவே, காலம் தாழ்த்தாது சொத்தின் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தால், அவருக்கு ஒதுக்கப் பட்டுள்ள சொத்தில் பங்குள்ளதாகக் கருதப்படுதல்வேண்டும்.

விளக்கம் 2- இப்பிரிவின் வரம்புரையில் இறந்துவிட்டவரின் இறப்புக்கு முன்பாக பங்குரிமையிலிருந்து தானே பிரிந்து சென்றிருந்த நபரையோ அல்லது அவரது வாரிசுதாரர்கள்

எவரையேனுமோ, அதில் குறிப்பிடப்பட்டுள்ள பாத்தியதையின் பங்கினை விருப்புறுதியாவணம் எழுதா ததன் பேரில் கோருரிமை செய்ய இயல்விக்கின்றதாகப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும் என எதுவும் உள்ளடங்கியிருக்கவில்லை. "

17. மித்தாக்ஷரா பங்குரிமைச் சொத்தில் இறந்தவரின் பாத்தியதையானது, அவர் சொத்தின் பாகப்பிரிவினைக்கு உரிமையுள்ளவரா? இல்லையா? என்பதைப் பொருட்படுத்தாமல், காலந்தாழ்த்தாது அவரது இறப்பிற்கு முன்பாகவே அவரது சொத்தின் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தால், அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்தில் பங்குள்ளதாகக் கொள்ளப்படுதல்வேண்டும் என்று மேற்சொன்ன பிரிவின் 1-ஆவது விளக்கம் ஐயத்திற்கிடமின்றி குறிப்பிடுகின்றது. **அனார் தேவி மற்றும் பலர் எதிர்-பரமேஸ்வரி தேவி மற்றும் பலர், 2006 (8) எஸ்.சி.சி. 656**[1]-இல் இந்நீதிமன்றத்தின் முன்பாக பொருள்விளக்கப்படுவதற்காக வந்தது.இந்நீதிமன்றம் முல்லா அவர்களின் இந்து சட்டக் கோட்பாடுகள், 17-ஆவது பதிப்பு, தொகுதி II, பக்கம் 250 என்ற அதிகாரப்பூர்வமான ஆய்வுக்கட்டுரையிலிருந்து பின்வரும் பத்தியை மேற்கோள்காட்டியுள்ளதில், அறிவார்ந்த எழுத்தாளர், பிரிவு 6-இன் விளக்கம் 1-க்கு பொருள்விளக்கமளிக்கையில் பின்வரும் குறிப்புகளைச் சொல்லியு ள்ளார்:

> " 1-ஆவது விளக்கம், ' மித்தாக்ஷரா பங்குரிமைச் சொத்தில் இறந்தவரின் உரிமை' என்ற சொல்லமைப்பை வரையறுத்து,

---

1 (2006) 8 SCC 656

கருத்தியலான பாகப்பிரிவினை என்ற அடிப்படைக் கொள்கையை விசயத்திற்குள் இணைக்கிறது. கருத்தியலான பாகப்பிரிவினையானது,மரப்ரிமையை இயல்விக்கவும், வேறுவகையில் எஞ்சுநர் உரிமைமூலம் மாற்றத்திற்குரியதான பாத்தியதையைக் கணக்கிடவும், அட்டவணையின் பிரிவு 1-இல் குறிப்பிடப் பட்டுள்ள உறவினர்களின் பாத்தியதையை அப்பங்குகளில் உறுதிப்படுத்தவுமான இவற்றை இயல்விக்கும் நோக்கத்திற்கானது என்பதைக் குறித்துக்கொள்வது இன்றியமை யாததாகும். இறந்துபோன பங்குரிமையரின் பாத்தியதையை, அத்தகையதாக முயன்று பெறுவதற்குட்பட்டு, பங்குரிமையில் மற்ற இடைநிகழ்வுகள் இடையூறு செய்யப்படாமல், பங்குரிமையானது பிரிக்கப்படாமல் தொடரலாம். உத்தேசமான சூழ்நிலைகள் உண்மையில் இருந்தாற்போன்று, உத்தேசமான சூழ்நிலைகளின் விளைவுகளும், நிகழ்வுகளும் அதனுடன் இணைந்தோ அல்லது அதிலிருந்தோ செல்லவேண்டும் மற்றும் அந்த உத்தேசமான சூழ்நிலைகளின் தவிர்க்கவியலா அனுமானங்களுக்கு செயல் விளைவு கொடுக்கப்படவேண்டும் என்று கற்பனையான சூழ்நிலைகளை உண்மை யானதாகக் கருதுகின்ற சட்டப் புனைவு கோருகிறது."

7. கற்றறிந்த எழுத்தாளர் மேலும் கூறுவதாவது: கருத்தியலான யலான பாகப்பிரிவினை, அதன் தவிர்க்கவியலா அனுமானங்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றின் செயல்பாடானது இப்பி ாிவின்

நோக்கங்களுக்காக அதாவது பங்குரிமைச் சொத்தில் இறந்தவரின் பாத்தியதையின் உரிமைமாற்றத்திற்காகவும் மற்றும் அனைத்து எஞ்சி நிற்கும் பங்குரிமையர்களுக்கிடையே முறைப்படியான பாகப்பிரிவினையும் தகுநிலை பிரிவினையும் உண்மையிலேயே இருந்தாற்போன்று பங்குரிமையின் மொத்தப் பிரிவினையும் கொண்டுவருவதைப்பற்றி மட்டுமேயாகும்

'8. கற்றறிந்த எழுத்தாளரின் கூற்றுப்படி, 253 254-ஆவது பக்கங்களில் வரம்புரையில் வகுத்துரைக்கப்பட்ட விதிக்கு செயல்விளைவு கொடுக்கும் பொருட்டாக, இறந்துவிட்ட பங்குரிமையரின் பிரிக்கப்படாத பாத்தியதையானது, அவரது இறப்பு நாளன்று இருந்தவாறான கருத்தியல் பாகப்பிரிவினையின் அடிப்படையில், ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டவாறு,உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்பங்கினை உறுதிசெய்தல் என்பது, அவரது இறப்பிற்கு முன்னர் காலந்தாழ்த்தாமல் உண்மையில் பாகப்பிரிவினை நடந்து, கூட்டுக் குடும்பம் மற்றும் பாகப்பிரிவினை சட்டப்படி, அந்த நபருக்கு உறுதிசெய்யப்படக்கூடியதாய் இருப்பின், பங்குரிமைச் சொத்தில் ஒரு பங்குக்கு உரிமை பெறக்கூடியவர்களான நபர்களின் எண்ணிக்கைமீது சார்ந்திருக்க வேண்டும்.ஆகவே, பங்குரிமையரின் இறப்பின்போது நடைமுறையிலுள்ள விசயத்தின்பேரில், இந்துச் சட்டத்தின் விதிகள் கருத்தியல் பாகப்பிரிவினையின் பேரிலான பங்குக்கு உரிமைபெறக் கூடியவர்களான நபர்களை

உறுதிசெய்தல் என்ற வினாவினை தீர்வு செய்வதற்குரியதாய் இருக்கின்றன. "

18. அதன்பிறகு, நீதிமன்றம், சில தீர்ப்புரைகளைக் குறிப்பிட்டு, சட்ட புனைவு எம்முறையில் பொருள்கொள்ளப்பட வேண்டுமென்பதை ஒவ்வொன்றாகக் கூறி, நிலையை பின்வருமாறு தொகுத்துரைத்ததாவது:

"11. இவ்வாறு, சட்டத்தின் பிரிவு 6-ஒரு பங்குரிமையர்,

சட்டத்தின் அட்டவணையின் 1-ஆவது பிரிவில்
குறிப்பிடப்பட்ட பெண் உறவினர் அல்லது அப்பெண்
உறவினர் மூலம் உரிமைகோருகின்ற, அப்பிரிவில்
குறிப்பிடப்பட்ட ஆண் உறவினர் எவரையேனும்
விட்டுவிட்டு இறப்பாரானால், மித்தாக்ஷரா
பங்குரிமைச் சொத்தில் அவரது பிரிக்கப்படாத
பாத்தியதை, விருப்புறுதி ஆவணம் எழுதாமல்
வாரிசுரிமைப்படி, அவரது வாரிசுதாரர்கள்மீது உரிமை
மாற்றம் பெறுமே மயன்றி, எஞ்சரிமையர் மூலம்,
உயிர்வாழ்ந்து வருகின்ற பங்குரிமையர் மீதல்ல என்று
நாங்கள் தீர்மானிக்கிறோம்.ஓர் இறந்துவிட்ட
பங்குரிமையரின் பிரிக்கப்படாத பாத்தியதை
உறுதிப்படுத்தப்படவேண்டிய செயலமைவுத்
திட்டத்தை, அதாவது, ஓர் இந்து மித்தாக் க் ஷரா
பங்குரிமையரின் பாத்தியதையானது, அவர்
பாகப்பிரிவினை கோர
உரிமையுள்ளவரா?இல்லையா?என்பதைப்
பொருட்படுத்தாது, அவரது இறப்பிற்கு முன்
காலந்தாழ்த்தாமல் சொத்தில் பாகப்பிரிவினை

நடந்திருந்தால், அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய சொத்தில் பங்குள்ளதாகக் கருதப்படுதல்வேண்டும் என்று சட்டத்தின் பிரிவு 6-இல் உள்ள 1-ஆவது விளக்கம் வகைசெய்கிறது. இறந்துவிட்ட பங்குரிமையர் ஒருவரின் பிரிக்கப்படாத பாத்தியதையைக் கண்டறியும் நோக்கங்களுக்காக, அவரது இறப்பிற்கு முன்பாக காலந்தாழ்த்தாமல் கருத்தியல் பாகப்பிரிவினையானது மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அது, வாரிசுரிமைப்படி, அவரது வாரிசுதாரர்கள் மீது உரிமைமாற்றம் பெற்று, எஞ்சியிருக்கும் பங்குரிமையரை ஐயத்திற்கிடந்தராமல் உள்ளடக்கும்; வாரிசுரிமைப்படி அவர்மீது இறந்தவரின் பிரிக்கப்படாத பாத்தியதையின் உரிமை மாற்றம் பெறுவதைத்தவிர, அவர் கருத்தியல் பாகப்பிரிவினையில் பெற்றிருக்கக் கூடியதான பங்குரிமைச் சொத்தில், அவரது பிரிக்கப்படாத பாத்தியதையைக் கோருவதற்கும் உரிமையுடைய வராவார் என்று பொருள்படுகிறது. "

19. இவ்வழக்கு, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட க தெளிவாகவே மறுக்கிறது.

20. அதைத்தவிர, காண்க:2005-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம், மேற்சொன்ன பிரிவின் திருத்தமானது, மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக சந்தேகச் சாயல் ஏதுமின்றி பிரச்சனையை முடிவுசெய்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். இத்திருத்தமானது, தற்போது பங்குரிமையரின் மகள்மீது, மகன் போன்றே அதேமுறையில், அவளுக்குரிய உரிமையில் பங்குரிமையரின்

தகுநிலையையும் அளித்து, மகனாக இருந்திருந்தால் பங்குரிமையரின் சொத்துக்களில் அவள் பெற்றிருந்திருக்கக்கூடிய அதே உரிமைகளையும், பொறுப்புகளையும் அளிக்கிறது.திருத்தப்பட்ட வகையம் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்பப்படுவதாவது:

"6. பங்குரிமைச் சொத்தில் பாத்தியதையின் உரிமை மாற்றம்- (1) இந்து வாரிகரிமை (திருத்தம்) சட்டம், 2005 (39/2005) துவங்கிய நாள் முதற்கொண்டு, மித்தாக்ஷரா சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட இந்து கூட்டுக் குடும்பமொன்றில் பங்குரிமையரின் மகளானவர்,

அ) மகனைப் போன்றே அதேமுறையில் பிறப்பினால் அவளுக்குரிய உரிமையில் பங்குரிமையராதல்;

ஆ) மகனாக இருந்திருந்தால், பெற்றிருக்கக்கூடிய அதே உரிமைகளை அவள் பங்குரிமைச் சொத்துக்களில் பெற்றிருத்தல்;

இ) மேற்படி பங்குரிமை சொத்தைப் பொறுத்த வரையில், மகனைப்போன்றே அதே பொறுப்புரிமைகளுக்குட்பட்டிருத்தல் மற்றும் இந்து மித்தாக்ஷரா பங்குரிமையர் ஒருவரை குறித்த சுட்டுகை எதுவும் பங்குரிமையரின் மகளைக் குறித் த சுட்டுகையை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல்வேண்டும்

ஆனால், 2004-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20-ஆம் நாளுக்கு முன்பாக நடந்திருந்த சொத்தின் பாகப்பிரிவினை அல்லது விருப்புறுதியாவண உரிமை மாற்றம் எதுவும் உட்பட, உரிமை மாற்றம் அல்லது உடைமை மாற்றம் எதனையும்,

இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பாதிக்கவோ அல்லது செல்லாததாக்கவோ செய்யாது.

(2) உட்பிரிவு (1)-இன்படியாக இந்து பெண் ஒருவருக்கு உரிமையாகின்ற சொத்து எதுவும், பங்குடைமை உரிமை சார்ந்த நிகழ்வுகளுடன் அவளால் வைத்துக் கொள்ளப்பட்டு, இச்சட்டத்தில் அல்லது அவ்வப்போது அமலிலுள்ள வேறு சட்டம் எதிலும் அடங்கியது எவ்வாறிருப்பினும், விருப்புறுதியாவண உரிமை மாற்றம் மூலம் அவளால் தீர்வு செய்யப்படுவதற் குரிய சொத்தாகக் கருதப்படுதல்வேண்டும்.

(3) இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், 2005 (39/2005) -இல் துவங்கியபிறகு, ஓர் இந்து இறக்கிறவிடத்து, மித்தாக்ரா சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் இந்து கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள அவரது பாத்தியதை, இச்சட்டத்தின்கீழ் எஞ்சுநர் உரிமைப்படியாக அல்லாமல் நேர்வுக்கேற்ப விருப்புறுதி யாவணம் அல்லது விருப்புறுதியாவணமில்லா வாரிசுரிமை மூலமாக உரிமை மாற்றமடைதல் வேண்டும் மற்றும் பங்குரிமை சொத்தானது, பாகப்பிரிவினை நடந்தாற் போன்று பிரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும்

அ) ஒரு மகனுக்கு ஒதுக்கப்படுகின்றவாறான அதே பங்கு மகளுக்கும் ஒதுக்கப்படுகின்றது;

ஆ) முந்தி இறந்த மகன் அல்லது முந்தி இறந்த மகள் பாகப்பிரிவினை சமயத்தில் உயிருடன் இருந்திருந்தால் அவர்கள் பெற்றிருக்கக்கூடிய அந்தப் பங்கானது அந்த முந்தி

இறந்த மகன் அல்லது அந்த முந்தி இறந்த மகளின் எஞ்சியிருக்கும் குழந்தைக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும் மற்றும்

இ) முந்தி இறந்த மகன் அல்லது முந்தி இறந்த மகளின் முந்தி இறந்த குழந்தையின் பங்கை பாகப்பிரிவினை சமயத்தில் அவரோ அல்லது அவளோ உயிருடன் இருந்து அக்குழந்தை பெற்றிருக்கக்கூடுமாதலால் அது நேர்வுக்கேற்ப அந்த முந்தி இறந்த மகன் அல்லது முந்தி இறந்த மகளின் முந்தி இறந்த குழந்தையின் குழந்தைக்கு ஒதுக்கப்படுதல்வேண்டும்.

விளக்கம் - இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் இந்து மித்தாக்ஷரா பங்குரிமையரின் பாத்தியதையானது, அவர் பாகப்பிரிவினையைக் கோர உரிமை யுள்ளவரா? இல்லையா? என்பதைப் பொருட்படுத்தாமல், அவரது இறப்புக்கு முன்பாக காலந்தாழ்த்தாமல் சொத்தின் பாகப்பிரிவினை நடந்திருந்தால், அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய சொத்தில் பங்குள்ளதாகக் கருதப்படுதல்வேண்டும்.

(4) 2005-ஆம் ஆண்டு (39/2005) இந்து வாரிசுரிமைச் சட்டம் துவங்கிய பிறகு, ஒரு மகன், பேரன் அல்லது கொள்ளுப்பேரன் மீது, அவரது தந்தை, தாத்தா அல்லது கொள்ளு-தாத்தா கொடுக்கவேண்டிய கடன் எதையும் வசூலிப்பதற்காக, இந்து சட்டத்தின் கீழ் அக்கடன் எதனையும் தீர்ப்பது அந்த மகன், பேரன் அல்லது கொள்ளுப்பேரனின் சமயக் கடப்பாடு என்ற அடிப்படையில் மட்டுமே நடவடிக்கையெடுக்கும் உரிமை எதனையும் நீதிமன்றம் அங்கீகரிக்காது:

ஆனால், 2005-ஆம் ஆண்டு (39/2005) இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், துவங்குவதற்கு முன்பாக ஒப்பந்தமிடப்பட்ட எந்தக் கடன் வகையிலும், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்.

அ) நேர்வுக்கேற்ப மகன், பேரன் அல்லது கொள்ளுப்பேரன்மீது நடவடிக்கையெடுக்க எந்தக் கடன் கொடுத்தவரின் உரிமையையும்; அல்லது

ஆ) அத்தகைய கடன் எதையும், உரிமை மாற்றம் செய்வதோ அல்லது அதை நிறைவேற்றுவதோ ஏதும், அத்தகைய உரிமை அல்லது உடைமை மாற்றம் ஏதும், இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம், 2005 (39/2005) இயற்றப்படாதிருந்தாற் போன்று, சமயக் கடப்பாடு என்ற விதியின் கீழ் அது செயற்படுத்தப்படக்கூடிய தென்பதால், அதேமுறையில், அதே அளவுக் செயற்படுத்தப்படுதல்வேண்டும்.

விளக்கம்-கூறு (அ) -இன் நோக்கங்களுக்காக, மகன் ", " பேரன் " அல்லது " கொள்ளுப் பேரன் " என்ற சொற்கள், 2005-ஆம் ஆண்டு (39/2005) இந்து வாரிசுரிமை திருத்தச் சட்டத்தின் துவக்கத்திற்கு முன்னர் பிறந்த அல்லது மகவேற்பெடுக்கப்பட்ட மகன், பேரன் அல்லது கொள்ளுப்பேரனை நேர்வுக்கேற்ப குறிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் 2004-ஆம் ஆண்டு டிசம்பர் 20-ஆம் நாளுக்கு முன்னர் செயற்படுத்தப்பட்டுள்ள பாகப்பிரிவினைக்கு பொருந்தாது.

விளக்கம்-இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "பாகப்பிரிவினை" என்பது 1908-ஆம் ம் ஆண்டின் (16/1908) பதிவுச் சட்டத்தின்கீழ் முறையாகப் பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினையாவணம் எழுதிக்கொடுத்ததன் மூலம் செய்யப்பட்ட பாகப்பிரிவினை எதுவும் அல்லது நீதிமன்றத் தீர்ப்பாணை மூலம் செயற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை எனப் பொருள்படுகிறது. "

21. இத்திருத்தத்தின் செயல்விளைவானது, குறிப்பாக, 2005-ஆம் ஆண்டு, செப்டம்பர் 9-ஆம் ம் நாளுக்குப்பிறகு சட்டம் அமலுக்கு வந்தபோது பிறந்த மகள்களுக்கு மட்டும் உரிமையளிக்கப்படக்கூடுமா?அல்லது அதற்கு முன் பிறந்த மகள்களுக்குமா?என்பது குறித்த பிரச்சனை பல்வேறு உயர் நீதிமன்றங்களால் பகரப்பட்ட தீர்ப்புகளின் விசயப்பொருளாக இருந்திருக்கிறது.சட்டம் அமலுக்கு வரக்கூடிய பின்னிட்ட நாளை சட்டமன்றமே குறிப்பிட்டுள்ளபோது, திருத்தத்திற்கு முன்னரேயே பிறந்த அனைத்து மகள்களுக்கும் வகையத்தைப் பொருந்தத்தக்கதாய் ஆக்க இயலாது என்று **வைஷாலி சதீஷ் கோனார்கர் -எதிர்-சதீஷ் கேஷோராவ் கோனார்கர், ஏ.ஐ.ஆர் .2012 பம்பாய் 110-**இல் பம்பாய் உயர் நீதிமன்றம் கருத்து கூறியது.இக்கருத்து, **சதாசிவ் சக்காராம் பட்டீல் -எதிர் சந்திரகாந்த் கோபால் தேசாலே, 2011 (5) பம்பாய் சி.ஆர். 726**-இல் இதே நீதிமன்றத்தால் கூறப்பட்ட கருத்துக்கு மாறுபாடாய் இருந்தது.வழக்கு முழு நீதியராயத்திற்கு குறித்தனுப்பப்பட்டு, முழு நீதியராயம், **பத்ரிநாரயண் சங்கர் பந்தாரி -**

எதிர்-ஓம் பிரகாஷ் சங்கர் பந்தாரி, 2014 (5) சி.டி.சி. 353 (பம்பாய்) (எப்.பி.): 2014 (3) எம்.டபிள்யூ.என்.(சிவில்) 225 (பம்பாய்) (எப்.பி.): ஏ.ஐ.ஆர். 2014 பம்பாய் 151-இல் அறிக்கையிடப் பட்டுள்ளது.பிரிவு 6-இன் உட்பிரிவு (1) -இன் கூறு (அ) தொலைநோக்கு செயல்பாடுடையது மற்றும் உட்பிரிவு (1) -இன் பிற பகுதிகளோடு உட்பிரிவு (2) -ம் பின்னுறசெயல்படக்கூடியதாகும் என முழு நீதியராயம் தீர்மானித்தது.2005-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் நாளன்று, அதாவது, 2005-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் அமலுக்கு வந்த நாளன்று மகள்கள் உயிருடனிருக்கின்றனர் என்பதற்குட்பட்டு, 1956-ஆம் ஆண்டு ஜூன் 17-க்கு (இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வந்த நாளன்று) முன்னரோ அல்லது அதற்குப் பிறகோ (1956-ஆம் ஆண்டு ஜூன் 17 மற்றும் 2005-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-க்கிடையே) பிறந்த மகள்களுக்கு திருத்தப்பட்ட பிரிவு 6 பொருந்தும் எனத் தீர்மானிக்கப்பட்டது.ஒரிசா, கர்நாடகா மற்றும் டில்லி ஆகிய உயர் நீதிமன்றங்களும் அதே விளைவுக்கே தீர்மானித்தது.**பிராவத் சந்திர பட்நாயக் -எதிர்-சரத் சந்திர பட்நாயக், ஏ.ஐ.ஆர். 2008 ஒரிசா 133; சுக்லாபாய்-எதிர்-குண்டப்பா ஏ. மராடி, ஐ.எல்.ஆர். 2007 கர்நாடகா 4790 மற்றும் ராக்கி குப்தா -எதிர் ஜூடீஉஹூடீர் அஉறமத், 2013 (197) டி.எல்.டி. 154.**

22. **பிரகாஷ் மற்றும் பலர்-எதிர்-புலாவதி மற்றும் பலர், 2015 (6) சி.டி.சி. 576 (எஸ்.சி.): 2016 (2) எஸ்.சி.சி. 36** என்ற வழக்கில் அதிகாரப்பூர்வமான தீர்ப்புரையுடனான கருத்துமாறுபாடானது தற்போது தீர்வு செய்யப்பட்டு, மேற்சொன்ன உயர் நீதிமன்றங்கள் உட்பட பம்பாய் உயர் நீதிமன்ற முழு நீதியராயத்தால் எடுக்கப்பட்ட

கருத்தை அங்கீகரித்துள்ளது.மேற்படி தீர்ப்புரையிலிருந்து தொடர்புடைய விவாதம் பின்வருமாறு:

"17. 2005-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை (திருத்தம்) சட்டம் துவங்கிய நாளன்றும், அது முதற்கொண்டும் " ஒரு பங்குரிமையரின் மகளுக்கு " உரிமை அளிக்கப்பட்டது என்று திருத்தத்தின் உரைமூலம் தெளிவு ற வகைசெய்கிறது.பிரிவு 6 (3) -ஆனது திருத்தத்திற்குப் பிறகான இறப்பிற்கு அதன் பொருந்துகையைக் குறித்து சொல்கிறது.சட்டத்தின் எளிய மொழிநடையினைக் கருத்திற்கொண்டால், திருத்தத்தின் உரைமூலத்தால் கருத்துரைக்கப்பட்ட ஒன்றுக்கு மேலானதொரு மாறுபட்ட பொருள்விளக்கத்திற்கான வாய்பேதுமில்லை. நிலைமுறையான வகையமொன்றின் திருத்தமானது, வெளிப்படையாகவோ அல்லது தேவையான பொருள்விளக்கத்தின் படியாகவோ முன்னுற இயங்கும் தன்மையுடையதாக இருந்தாலன்றி, அது எப்போதும் தொலைநோக்குடையதாகும். **[உஷியாம் சுந்தர் -எதிர்- இராம் குமார், 2001 (8) எஸ்.சி.சி. 24, பத்திகள் 22 முதல் 27]**. தற்போதைய வழக்கில், திருத்தப்பட்ட வகையத்திற்கு முன்னுற இயங்கும் தன்மையை அளிக்கவோ அல்லது அவ்விளைவுக்கு தேவையான பொருள் விளக்கம் அளிக்கவோ வெளிப்படையான வகையம் ஏதுமில்லை.சட்ட நடவடிக்கை மூலமான சட்டப்படியான கருத்தியல் பாகப்பிரிவினையின் த ன்மையைக் கருத்திற்கொண்டு, திருத்தப்படாத

வகையத்தின்படி, பாகப்பிரிவினையைப் பதிவு செய்கின்ற தேவை, அத்தகைய பாகப்பிரிவினைக்கு பொருந்தக்கூடியதல்ல.திருத்தத்தின் உட்கருத்தும், விளைவும் சிறிதுநேரம் கழித்து ஆராயப்படும். இக்காண்முடிவின்பேரில் உயர் நீதிமன்றத்தின் கருத்து நிலைநிறுத்தப்பட இயலாது

18. திருத்தமானது, சமூகச் சட்டத்தின் ஒரு 7 குதியாக இருப்பதால் ல் முன்னுற இயங்குவதாக பொருள்கொள்ளப்பட வேண்டுமென்பது ஏற்கப்பட இயலாது என்பது எதிர் மேல்முறையீட்டாளர்களின் வாதமாகும்.முன்னுற இயங்குந்தன்மையானது சட்டமன்றத்தால் அவ்வாறு வழங்கப் பட்டாலன்றி அல்லது அவ்வாறு திட்டமிடப் பட்டாலன்றி, ஒரு சமூகச் சட்டத்திற்குங்கூட அளிக்கப்பட இயலாது.தற்போதைய வழக்கில், திருத்தமானது, அதன் துவக்க நாளிலிருந்து பொருந்தத்தக்கதென சட்டமன்றம் தெரிவித்துள்ளது.இவ்வாறாக, சட்டத்தின் தெளிவான மொழிநடையினை முன்னிட்டு, வேறெந்த பொருள்விளக்கமும் சாத்தியமல்ல என்பதாகும்.20.12.2004-க்கு முன்னதான உடைமை மாற்றங்களை அல்லது உரிமை மாற்றங்களை அல்லது பாகப்பிரிவினைகளை, வரம்புரை பாதிக்கவில்லையென்றாலும், சட்டத்தின் துவக்கத்திற்கு முன்னர், மகள் பங்குரிமையராக இருக்க முடியும் என்ற அனுமானத்திற்குங்கூட அது இட்டுச்செல்லாது. அதில்.உள்ளடக்கப்படாத நடவடிக்கைகள், முதன்மை வகையம் பொருந்தத்தக்கதாக இருக்கிறபோது, கிடைக்கக்கூடிய பங்குரிமையின் அளவைப் பாதிக்காது என்றுதான் வரம்புரை பொருள்கொள்கிறது. அதேபோல், 20.12.2004-க்குப் பிறகு செயற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை

நடவடிக்கைக்குட்பட்டிருப்பதால், விளக்கமானது, பிரிவு 6 (5) -இன் நிலை முறையான வகைமுறையுடன் இணக்கமுற பொருள்கொள்ளப்படவேண்டும்.கருத்தியலான பாகப்பிரிவினையானது அதன் இயல்புத்தன்மையினாலேயே வரம்புரையின் கீழாகவோ அல்லது விளக்கத்தின் கீழாகவோ உள்ளடக்கப்படவில்லை

19. ஒரு வகையத்தின் பொருள்விளக்கமானது, உரை மற்றும் பொருளின்மீது சார்ந்திருக்கிறது. **(ஆர்.பி.ஐ-எதிர்-பியர்லெஸ் ஜெனரல் பினான்ஸ் மற்றும் இன்வெஸ்ட்மென்ட் கம்பெனி லிமிடெட், 1987 (1) எஸ்.சி.சி. 424, பக்கம் 450, பத்தி 33]**.சாதாரண விதியானது, சட்டத்தின் சொற்களுக்கு சாதாரணமாகவே பொருளளிக்கிறது.இரு பொருள் தெரிவிக்கும் நேர்வில் பகுத்தறிவான பொருள்கொள்ளப்பட வேண்டும்.(கேஉறர் சிங் - எதிர்-அரசு (டெல்லி நிர்வாகம்), 1988 (3) எஸ்.சி.சி. 609:1988 எஸ்.சி.சி. (கிரி.) 711].தெளிவான முரண்பாடு என்ற நேர்வில், சட்டமன்றத்தின் குறிக்கோளையும், உட்கருத்தையும் முன்கொணரும் இணக்கமான பொருள் கொள்ளப்படவேண்டும். **[டிஸ்டிரிக்ட் மைனிங் ஆபிசர் -எதிர்-டி.ஐ.எஸ்.சி.2001 (7) எஸ்.சி.சி. 358].**

20. ஒரு வரம்புரையோ அல்லது விளக்கம் ஒன்றோ பொருள் விளக்கத்திற்காக வந்தபோது, அதிக எண்ணிக்கையிலான நேரடி காரணங்கள் இருந்துள்ளன.உரை, பொருள் மற்றும் நோக்கத்தின்மீது சார்ந்து, பொருள்விளக்கத்தின் வெவ்வேறு விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.(எஸ்.சுந்தரம் பிள்ளை - எதிர்-வி.ஆர்.பட்டாபிராமன், 1985 (1) எஸ்.சி.சி .591].

21. இயற்றப்பட்ட சட்டத்திலிருந்து ஏதோ ஒன்றைத் தவிர்க்கின்ற ஒரு வரம்புரையானது, வேறுவகையாக இயற்றப்பட்ட சட்டத்தின் அகப்பாட்டெல்லைக்குள் இருக்கும் என்பது சாதாரண விதியாகும்.ஆனால், உரை, பொருள் அல்லது நோக்கம் அவ்வாறு கோருமானால், வேறுபட்ட விதி ஒன்றைப் பயன்படுத்தலாம்.அதேபோன்று, விளக்கம் என்பது பிரிவிலுள்ள வார்த்தைகளை விளக்குவதாகும், ஆனால், மொழி அல்லது நோக்கம் அவ்வாறு கோருமானால், விளக்கமானது அவ்வாறு பொருள்விளக்கம் செய்யப்படலாம்.சட்டங்களின் பொருள் விளக்க விதிகளானவை, கடுமைவாய்ந்த முதலாளிகளாக அல்லாமல் பயனுள்ள வேலைக்காரர்களாயிருத்தல்வேண்டும்.[கேஷவ்ஜி ராவ்ஜி & கம்பெனி -எதிர் சி.ஐ.டி., 1990 (2) எஸ்.சி.சி. 231:1990 எஸ்.சி.சி. (டேக்ஸ்) 268].பொருள்விளக்கத்தின் நோக்கமே, சட்டமன்றத்தின் உட்கருத்தைக் கண்டறிவதாகும்.

22. இப்பின்னணியில், பிரிவு 6 (1) -க்குரிய வரம்புரையும், பிரிவு இன் உட்பிரிவு (5) -ம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட நாளான 20.12.2004-க்கு முன்னதாக நடந்திருக்கக் கூடிய, அதில் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை நீக்குவதற்கு தெளிவாக எண்ணங்கொண்டுள்ளது.செல்லும் தன்மையுடைய பாகப்பிரிவினைகளை செயற்படுத்தியபிறகு, அவற்றை மீண்டும் செய்வதற்கு விளக்கம் அனுமதிக்காது.20.12.2004-க்கு முன்னதான நடவடிக்கை களுக்கு இறுதி செயல்நோக்கம் அளிப்பது என்பது முதன்மை வகையத்தை எவ்விதத்திலும் முன்னுற இயங்கவைக்காது ாது.மசோதா

அறிமுகப்படுத்தியதில், கிடைக்கக் கூடிய சொத்து, போலி நடவடிக்கைகள் மூலம் பறித்துக்கொள்ளப்படாது மற்றும் சட்டத்தால் உரிமையளிக்கப்பட்டு எஞ்சியிருப்பவை கிடைக்கத்தக்கதாக ஆகிறபோது, அது செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே நோக்கமாகும்.பிரிவுகள் 6 (1) மற்றும் (3) - இன் முக்கிய வகையத்தின் திருத்தமானது, எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டதாக கருதப்படாததோடன்றி, அது இவ்வழியில் வலிமையூட்டப்பட்டது. மேல்முறையீட்டாளர்களால் சார்வுறப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளை உள்ளடக்குகிற அறுதியிடப்பட்ட கோட்பாடுகள், 20.12.2004-க்கு முன்னதான காலத்திற்கு நீக்கப்படுவதற்கான எண்ணமில்லை. சட்டப்படியான கருத்தியல் பாகப்பிரிவினையானது, 20.12.2004-க்குப் பிறகுங்கூட, வினாவிற்கிடமான விளக்கத்தாலோ அல்லது வரம்புரையாலோ எவ்வகையிலும் உள்ளடக்கப்பட இயலாது.

23. அதற்கிணங்க, நாங்கள் முடிவு செய்ததாவது, திருத்தத்தின்படியான உரிமைகள், 2 உயிரோடிருக்கும் பங்குரிமையர்களின் உயிரோடிருக்கும் மகள்கள் மகள்கள்,, எப்போது பிறந்திருந்திருக்கின்றனர் என்பதைப் பொருட்படுத்தாது, 9.9.2005-இன்படியன்று உள்ளவாறாக அத்தகைய மகள்களுக்கு பொருந்தத்தக்கவையாகும். 20.12.2004-க்கு முன்னதாக நடந்திருக்கக்கூடிய பாகப் பிரிவினைகள் உட்பட உரிமை மாற்றம் அல்லது உடைமை மாற்றமானது, மேற்படி தேதிக்கு முன்னதாகப் பொருந்தத்தக்க சட்டத்தின்படி, பாதிப்படையாமலிருக்கும்.

அதற்குப் பிறகு செயற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை நடவடிக்கை எதுவும் விளக்கத்தால் கட்டுப்படுத்தப்படும் என்பதாகும். "

23. மித்தாக் ஷரா சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகிற ஓர் இந்து கூட்டுக் குடும்பம் தொடர்பான சட்டம் முன் எப்போதுமில்லாத அளவுக்கு மாற்றங்களுக்குட்பட்டுள்ளது.அம்மாற்றங்கள், நெருங்கிய பெண் உறவினர்களுக்கு, அதாவது, பங்குரிமையரின் மகள்களுக்கு சம அந்தஸ்தை அளிப்பது என்ற வளர்ந்துவரும் தேவையை கையாள்வதற்கு முன்கொணரப்பட்டுள்ளன. ஒரு மகள், தனது பிறப்பிலிருந்து பங்குரிமையராக இருந்து, ஒரு மகனைப்போன்று அதே உரிமைகளையும், பொறுப்புகளையும் கொண்டிருக்கவேண்டுமென பிரிவு வரையறுக்கிறது.மகள், எந்தப் பங்குரிமை சொத்துக்கு உரிமையுடையவரோ, அச்சொத்தை வைத்திருக்கவும், அது அவளால், ஓர் உயில் மூலமாகவோ அல்லது வேறேதேனும் விருப்புறுதியாவண உடைமை மாற்றம் மூலமாகவோ மாற்றப்படுவதற்குரிய சொத்தாகப் பொருள்கொள்ளப்படும். இம்மாற்றங்கள் சமத்துவம் என்ற உரைகல்லின்மீது செய்யப்பட கோரப்பட்டுள்ளன, இவ்வாறாக, இது ஒரு மகளானவர் உள்ளாகின்ற தீங்கினையும், உணரப்பட்ட இயலாமையையும் களைவதற்கு கோருதலாகும்.1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தில், 2005-இல் திருத்தம் செய்ததன்மூலம் கொண்டுவரப்பட்ட அடிப்படையான மாற்றங்கள், ரோஸ்கோ பவுண்ட் அவர்களின் புகழ்பெற்ற

ஆய்வுக்கட்டுரையான, " சட்டத்தில் கருத்தியல் கூறு " " - இல் சட்டமானது நிலையாக இருக்கவேண்டும், ஆனாலும், அது நிலையாகவே இருக்க இயலாது.எனவே, நிலையானதன்மையின் தேவையையும், மாற்றத்திற்கான தேவையையும் கோருகின்ற முரண்பாடுகளைக் களைவதற்கு சட்டம் போராடி வருவதைப் பற்றியே அனைவரும் நினைத்துக்கொண்டிருக்கின்றனர் " என்று காணப்படுகின்ற அழியாப் புகழ்பெற்ற வாசகத்தை ஒருவேளை உணர்த்துவதாகவேயுள்ளன.

24. 2005-ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டம் துவங்கிய நாள் முதற்கொண்டு, ஒரு பங்குரிமையரின் மகளானவர் பிறப்பினால், மகனைப்போன்று அதே முறையில் தனக்குரிய உரிமையில் பங்குரிமையராகிறார் என்று பிரிவு 6 திருத்தப்பட்டவாறு வரையறுக்கிறது.பழைய இந்து சட்டம் மற்றும் பழைய பிரிவின் கீழ் மகன்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைத்தகுதியானது, அவர்களை பங்குரிமையர்களாக பிறப்பு முதல் கருதி வந்தது.திருத்தப்பட்ட வகையமானது, மகள்களுக்கும் பிறப்பு முதல் உள்ள பங்குரிமையரின் உரிமைகளை தற்போது சட்டப்படியாக அங்கீகரிக்கிறது.இப்பிரிவு, மகன்போன்று அதேமுறையில் என்ற சொற்களைப் பயன்படுத்துகிறது.ஆகவே, ஒரு பங்குரிமையரின் மகள்களுக்கும், மகன்களுக்கும் என இருவருக்கும் பங்குரிமையர்களாகின்ற உரிமை, பிறப்பு முதலே அளிக்கப்பட்டுள்ளன என்பது வெளிப்படையாக இருக்கவேண்டும்.ஒரு பங்குரிமையில், பிறப்பு என்ற பொருண்மையே பங்குரிமையை உருவாக்குகிறது, ஆகவே, ஒரு பங்குரிமையரின் மகன்களும், மகள்களும் பிறப்பின்படியாகவே பங்குரிமையர்களாகின்றனர்.பங்குரிமைச் சொத்தின் உடைமை

மாற்றம் என்பது பிந்திய நிலை மற்றும் அது ஒரு பங்குரிமையரின் இறப்பின் விளைவானதேயாகும்.பங்குரிமையின் முதல்நிலை என்பது, மேலே விளக்கப்பட்டவாறு, தெளிவாகவே அதன் உருவாக்கமும், அது நன்கு அங்கீகரிக்கப்படுவதுமாகும்.பங்குரிமை உடனிணைந்த கடமைப் பொறுப்புகளுள் ஒன்று, பங்குரிமையர் ஒருவர், உரிமைத்தகுதியைப் பிரித்துத்தரக்கோரும் உரிமையாகும்.எனவே, உட்பிரிவு (1) (அ) மற்றும் (ஆ) -லிருந்து தெளிவாவதைப்போன்று, பங்குரிமையர்களின் உரிமைகள் பிறப்பிலிருந்து தோன்றி தொடர்ந்து வருகிறது.

25. இந்து மித்தாக்ஷரா பங்குரிமையில் எப்போதும் மரபுரிமையானதாக பங்குரிமையாண்மை இருப்பதால், அவர்களின் கடமைப்பொறுப்புகளைப் புரிந்துகொள்வதற்கு, **ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா -எதிர்-கமண்டி ராம்** என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் முடிவைக் குறிப்பீடு செய்தல் இன்றியமையாததாகும்:

> " இந்து சட்ட மித்தாக்ஷரா மரபுப்படி, ஓர் இந்து கூட்டுக் குடும்பச் சொத்துக்களனைத்தும் கூட்டாண்மை போன்றதொரு தகுதிமுறையில் பங்குரிமையர்கள் அனைவராலும் கூட்டான உடைமையுரிமையில் வைத்துக்கொள்ளப் படுகிறது.மித்தாக்ரா சட்டமூலமானது, அப்போது உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்காகவும், அதற்குப்பிறகு பிறக்கப்போகிறவர் களுக்காகவுமான கூட்டுக் குடும்பச் சொத்தைப் பொறுப்பாட்சியினடிப்படையில் வைத்துக்கொள்கிறது எனத் தெளிவான பாங்கில் வகுத்தமைக்கிறது.(பார்க்க: மித்தாக் ஷரா, அத்தியாயம் 1,

1-27).மித்தாக் ஷரா சட்டப்படி பங்குரிமை யாண்மையரின் கடமை பொறுப்புக்களாவன:முதலாவதாக, ஒரு நபரின் நேர் மரபுவழி சார்ந்த ஆண் வழித்தோன்றல்கள் மூன்றாவது தலைமுறைவரை, மூதாதையர் சொத்துக்களில் பிறப்பின் பேரில் உரிமையுடைமைப் பெறுகின்றனர் என்பது பொதுவானது; இரண்டாவதாக, அந்த வழித்தோன்றல்கள், எச்சமயத்திலும் பாகப்பிரிவினைக்கான தங்களது உரிமைகளைக் கேட்டு நிறைவேற்றிக்கொள்ளலாம்; மூன்றாவதாக, பாகப்பிரிவினைவரையில், ஒவ்வொரு உறுப்பினரும், ஏனையோருடன் இணைந்து ஒட்டுமொத்தச் சொத்து முழுமைக்கும் உரிமையுடைமை கொண்டுள்ளனர்; நான்காவதாக, அத்தகைய கூட்டுடைமையின் விளைவாக சொத்துக்களின் சுவாதீனமும், அனுபவமும் பொதுவானது; ஐந்தாவதாக, பங்குரிமையர்களின் உடன்பாடின்றி, தேவைக்காக அல்லாமல் செய்யப்படும் சொத்தின் உடைமை மாற்றம் ஏதும் சாத்தியமல்ல மற்றும் ஆறாவதாக, ஓர் இறந்துவிட்ட உறுப்பினரின் பாத்தியதை அவரது இறப்பின்பேரில் எஞ்சரிமையர் களுக்கு சென்றுவிடுகிறது. "

26. எனவே, பாகப்பிரிவினை உரிமை ஒழிக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது.அவ்வுரிமை மரபுப்படியானது மற்றும் அதை எந்த பங்குரிமையராலும், தற்போது பங்குரிமையரான மகளாலுங்கூட பயன்படுத்திக்கொள்ளப்படலாம்.

27. தற்போதைய வழக்கில், பாகப் பிரிவினைக்கான வழக்கு 2002-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. எனினும், இவ்வுரிமை வழக்கு நிலுவையிலிருக்கையில், 2007-ஆம் ஆண்டில்தான் விசாரணை நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதால், சட்டத்தின் பிரிவு 6 திருத்தப்பட்டது. இவ்வாறு, மேல்முறையீட்டாளர்களின் உரிமைகள், 2005-ஆம் ஆண்டில் உறுதிசெய்யப் பெற்றன மற்றும் இந்த நிகழ்வு, விசாரணை நீதிமன்றத்தாலும், மேலும் உயர் நீதிமன்றத்தாலும் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.இந்நீதிமன்றம், கந்தூரி கோடீஸ்வரம்மா மற்றும் ஒருவர் எதிர்--சக்ரி யானாடி மற்றும் ஒருவர், 2011 (6) சி.டி.சி. 102 (எஸ்.சி.): 2011 (9) எஸ்.சி.சி. 788-இல் திருத்தப்பட்ட பிரிவு 6-இன்படி, பாகப்பிரிவினை வழக்கொன்றில் முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மட்டும் பங்குரிமைச் சொத்தில் மகள்களின் உரிமைகள் இழக்கப்பெறாது. பாகப்பிரிவினை வழக்குகளைப் பொறுத்தவரையில், பாகப்பிரிவினையானது, இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தலின்பேரில்தான் இறுதிநிலையாகிறது.அத்தகைய நிலைமை எழுகிறவிடத்து, 2005-ஆம் ஆண்டின் திருத்தத்தால் சட்டத்தில் மாற்றமேற்பட்டதைக் கருத்திற்கொண்டு, முதல்நிலைத் தீர்ப்பாணை திருத்தப்படவேண்டும்.

28. பொருண்மைகளின்பேரில், பாகப்பிரிவினை வழக்கில் விசயப்பொருளான சொத்து, கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமானது என்பதும், குருலிங்கப்ப சாவடி மேற்படியான கூட்டுக் குடும்பச் சொத்தினை சட்டப்படி முன்கொணர்ந்தவராவார் என்பதும் பூசலிலில்லை.எங்களது மேற்சொன்ன விவாதத்தைக் கருத்திற்கொண்டு, மேற்படியான பாகப்பிரிவினை வழக்கில், மேல்முறையீட்டாளர்களுங்கூட பங்கை மரபுரிமையராகப் பெறுவர்.சாவடி, இரு மகன்கள், இரு மகள்கள் மற்றும் ஒரு விதவை மனைவியை விட்டுவிட்டு இறந்துவிட்டதால், இரு மேல்முறை யீட்டாளர்களும் மேற்படி சொத்தில் ஒவ்வொருவரும் 1/5 பங்கு பெற உரிமையுடையவராவர்.வாதி (1-ஆவது எதிர் மேல்முறையீட்டாளர்), அருண் குமார் (1-ஆவது பிரதிவாதி) -இன் மகனாவார்.அருண் குமார் 1/5 பங்கினைப் பெறுவார் என்பதால், பாகப்பிரிவினையில், அதாவது, 1-ஆவது பிரதிவாதி-அருண் குமார், அவருடைய மனைவி 2-ஆவது பிரதிவாதி, அவரது இரு மகள்களான 3 மற்றும் 4-ஆவது பிரதிவாதிகள் மற்றும் மகன்/வாதி (1-ஆவது எதிர்மேல்முறை-யீட்டாளர்) ஆகியோருக்கு இடையே ஐந்து பங்குகளாகப் பிரிக்கப்படும்.இவ்விதத்தில், வாதி/ 1-ஆவது எதிர் மேல்முறையீட்டாளர் சொத்தில் 1/25 பங்குக்கு உரிமையுடையவராயிருப்பார்.

29. மேல்முறையீடுகள் மேற்சொன்ன விதிமுறைகளுடன் அனுமதிக்கப்பட்டு, அதன்படி விசாரணை நீதிமன்றத்தால் பாகப்பிரிவினை தீர்ப்பாணை வரையப்படுதல்வேண்டும் செலவுத்தொகை குறித்து உத்தரவேதுமில்லை.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஏ.கே.சிக்ரி

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்

புதுதில்லி
01.02.2018

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்க்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றம் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "